CC.No.35/2025 (JM.No.II, DHARMAPURI.)

19.05.2025

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டது. (எதிரி ஆஜர்)**

## PW 1: திரு.மூர்த்தி த/பெ. மாதையன்

**முதல் விசாரணை**

நான் ஏ.முருக்கம்பட்டியில் குடியிருந்து கொண்டு டிரைவராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். கடந்த 16.04.2024 அன்று மாலை சுமார் 05.30 மணிக்கு ஜெயராமன் என்பவர் போனின் மூலம் தகவல் சொன்னார். என்னுடைய அப்பாவிற்கு அடிப்பட்டது சம்பந்தமாக, என்னுடைய அப்பா வழக்கம் போல் பூ விற்பதற்காக அவருடைய இருசக்கர வாகனமான Super XL வாகனத்தில் திப்பம்பட்டியிலிருந்து முருக்கம்பட்டி ரோடு, காந்தி நகர் அருகே வந்த போது முருக்கம்பட்டியிலிருந்து திப்பம்பட்டி சென்ற பிக்கப் மகேந்திரா வாகனம் என்னுடைய அப்பாவின் மீது மோதியதில் தலையின் பின்புறம் அடிப்பட்டது. வலது பக்க கை, கால்களில் அடிப்பட்டது. பிறகு சம்பவயிடத்திற்கு சென்று ஆம்புலென்ஸ் மூலமாக தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன். இரண்டு நாட்களுக்கு பிறகு சிகிச்சை பலனின்றி என்னுடைய அப்பா மாதையன் இறந்துவிட்டார். நான் மருத்துவமனையில் இருந்த போது 17.04.2024 அன்று புகார் மனு கொடுத்தேன். இது சம்பந்தமாக காவல் துறையினர் என்னை விசாரித்தனர். அந்த **புகார் மனு அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

## எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது என்று நான் விபத்தை நேரில் பார்க்காததால் எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்தின் போது என் தந்தைக்கு வயது 62 என்றால் சரிதான். என் தந்தைக்கு மது அருந்தும் பழக்கம் உள்ளது என்றால் சரிதான். ஆனால் விபத்து சமயத்தில் மது அருந்தினாரா என்று எனக்கு தெரியாது. சம்பவதன்று எனது தந்தை மது அருந்திவிட்டு வாகனத்தை ஓட்டி சென்று அவருடைய கவனக்குறைவால் இருசக்கர வாகனத்தை அதிவேகமாக ஓட்டி சென்று எதிரே வந்த வாகனத்தின் மீது தன்னிச்சையாக மோதி விபத்தை ஏற்படுத்தி கொண்டார் என்றால் சரியல்ல. என் தந்தையின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதை மறைத்து நஷ்ட ஈடு பெறுவதற்காக பொய்யான புகாரை கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/-இரா.சுஷ்மிதா,
நீதித்துறை நடுவர் எண்.2
தருமபுரி.

CC.No.35 /2025 (JM.No.II, DHARMAPURI.)

19.05.2025

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டது. (எதிரி ஆஜர்)**

## PW 2: திரு.ஜெயராமன் த/பெ. பெருமாள்

**முதல் விசாரணை**

நான் முருக்கம்பட்டியில் குடியிருந்து கொண்டு மேஸ்திரி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அ.சா.1 யை எனக்கு தெரியும். விபத்தில் இறந்து போன மாதையன் என்பவரை தெரியும். கடந்த 16.04.2024 அன்று மாலை சுமார் 05.30 மணிக்கு காந்தி நகரில் உள்ள என்னுடைய வீட்டிற்கு அருகில் நின்று கொண்டிருந்தபோது என்னுடைய மாமா இருசக்கரவாகனமாக xl முருக்கம்பட்டியிலிருந்து திப்பம்பட்டி சென்ற போது மகேந்திரா பிக்கப் வாகனத்தின் ஓட்டுனர் அதிவேகமாக வந்து இருசக்கர வாகனத்தின் மீது மோதியதில் விபத்து ஏற்பட்டது. அந்த விபத்தில் XL வண்டியில் வந்த மாது என்பவருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. பின்பு அவரை தூக்கி உட்கார வைத்து தண்ணீர் கொடுத்தோம். பின்பு அ.சா.1 ற்கு தகவல் சொன்னோம். பின்பு ஆம்புலென்ஸ் மூலமாக தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அடுத்த நாள் அவர் இறந்துவிட்டதாக தெரிந்து கொண்டேன். இது சம்பந்தமாக காவல் துறையினர் என்னை விசாரித்தனர்.

## எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

விபத்து நடந்த இடத்திலிருந்து எனது வீடு 120 அடி தள்ளி உள்ளது என்றால் சரிதான். விபத்து நடந்த சத்தம் கேட்டு தான் நான் சம்பவ இடம் சென்றேன் என்றால் சரிதான். விபத்து நடந்த சமயத்தில் என் வீட்டின் முன்பு இருந்தேன். 120 அடி தள்ளி நடந்த விபத்தை யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது என்று என்னால் சொல்ல முடியாது என்றால் சரியல்ல. சம்பவத்தின் போது விபத்தில் அடிப்பட்டவர் மது அருந்தியிருந்தார் என்றால் சரியல்ல. நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றாலும், இறந்து போன நபர் என்னுடைய மாமா என்பதாலும், இழப்பீடு பெற வேண்டி எதிரியின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்தானது இரு வாகனமும் நேருக்கு நேராக மோதி தான் விபத்து ஏற்பட்டதா என்று எனக்கு தெரியாது. நான் சம்பவயிடத்தில் இருந்திருந்தால் விபத்து நடந்த விதம் எனக்கு தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல.

ஒப்பம்/−இரா.சுஷ்மிதா,<br>
நீதித்துறை நடுவர் எண்.2<br>
தருமபுரி.

**CC.No.35 /2025 (JM.No.II, DHARMAPURI.)**

**19.05.2025**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டது. (எதிரி ஆஜர்)**

## PW 3: திரு.பெரியசாமி த/பெ. கந்தசாமி

**முதல் விசாரணை**

நான் ஏ முருக்கம்பட்டியில் குடியிருந்து கொண்டு டிரைவராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 யை எனக்கு தெரியும். இவ்வழக்கில் இறந்து போன மாதையன் என்னுடைய பெரியப்பா ஆவார். 16.04.2024 அன்று மாலை 05.30 மணிக்கு என்னுடைய பெரியப்பாவான மாதையன் விபத்தில் அடிப்பட்டதாக தகவல் கிடைத்து சம்பவயிடத்திற்கு சென்று பார்த்த போது அவர் பேச்சு மூச்சின்றி சுய நினைவின்றி இருந்தார். அவரை ஆம்புலெனஸ் மூலமாக நானும், அ.சா.1 ம் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். சிகிச்சை பலனின்றி அடுத்த நாள் இறந்துவிட்டார். இது சம்பந்தமாக காவல் துறையினர் என்னை விசாரித்தனர்.

## எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

எதிரி தரப்பில் வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

ஒப்பம்/-இரா.சுஷ்மிதா,
நீதித்துறை நடுவர் எண்.2
தருமபுரி.

CC.No.35 /2025 (JM.No.II, DHARMAPURI.)

19.05.2025

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டது. (எதிரி ஆஜர்)**

## PW 4: திரு.மாரியப்பன் த/பெ. வடிவேல்

**முதல் விசாரணை**

நான் ஏ முருக்கம்பட்டியில் குடியிருந்து கொண்டு டிரைவராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 யை எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. இவ்வழக்கில் இறந்து போன மாதையன் என்னுடைய மாமா ஆவார். 16.04.2024 அன்று மாலை 05.30 மணிக்கு என்னுடைய மாமாவான மாதையன் விபத்தில் அடிப்பட்டதாக தகவல் கிடைத்து சம்பவயிடத்திற்கு சென்று பார்த்த போது அவர் பேச்சு மூச்சின்றி சுய நினைவின்றி இருந்தார். அவரை ஆம்புலெனஸ் மூலமாக நானும், அ.சா.1 ம் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். சிகிச்சை பலனின்றி அடுத்த நாள் இறந்துவிட்டார். இது சம்பந்தமாக காவல் துறையினர் என்னை விசாரித்தனர்.

## எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

எதிரி தரப்பில் வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

ஒப்பம்/-இரா.சுஷ்மிதா,
நீதித்துறை நடுவர் எண்.2
தருமபுரி.

CC.No.35 /2025 (JM.No.II, DHARMAPURI.)

19.05.2025

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டது. (எதிரி ஆஜர்)**

## PW 5: திரு.மாதம்மாள் க/பெ. மாதையன்

**முதல் விசாரணை**

நான் ஏ முருக்கம்பட்டியில் குடியிருந்து கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என்னுடைய மகன் ஆவார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. இவ்வழக்கில் இறந்து போன மாதையன் என்னுடைய கணவர் ஆவார். 16.04.2024 அன்று மாலை 05.30 மணிக்கு என்னுடைய கணவர் மாதையன் விபத்தில் அடிப்பட்டதாக தகவல் கிடைத்து சம்பவயிடத்திற்கு சென்று பார்த்த போது அவர் பேச்சு மூச்சின்றி சுய நினைவின்றி இருந்தார். அவரை ஆம்புலெனஸ் மூலமாக நானும், அ.சா.1 ம் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். சிகிச்சை பலனின்றி அடுத்த நாள் இறந்துவிட்டார். அப்போது என்னுடைய கணவர் மாதையன் பிரேததின் மீது காவல் துறையினர் பிரேத விசாரணை செய்த போது நான் சாட்சியாக இருந்து கையெழுத்திட்டேன். இது சம்பந்தமாக காவல் துறையினர் என்னை விசாரித்தனர்.

## எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

எதிரி தரப்பில் வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

ஒப்பம்/-இரா.சுஷ்மிதா,
நீதித்துறை நடுவர் எண்.2
தருமபுரி.

CC.No.35 /2025 (JM.No.II, DHARMAPURI.)

19.05.2025

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டது. (எதிரி ஆஜர்)**

## PW 6: திரு.சக்திவேல் த/பெ. மாதையன்

**முதல் விசாரணை**

நான் ஏ முருக்கம்பட்டியில் குடியிருந்து கொண்டு டிரைவராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என்னுடைய தம்பி ஆவார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. இவ்வழக்கில் இறந்து போன மாதையன் என்னுடைய அப்பா ஆவார். 16.04.2024 அன்று மாலை 05.30 மணிக்கு என்னுடைய அப்பா மாதையன் விபத்தில் அடிப்பட்டதாக தகவல் கிடைத்து சம்பவயிடத்திற்கு சென்று பார்த்த போது அவர் பேச்சு மூச்சின்றி சுய நினைவின்றி இருந்தார். அவரை ஆம்புலெனஸ் மூலமாக நானும், அ.சா.1 ம் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். சிகிச்சை பலனின்றி அடுத்த நாள் இறந்துவிட்டார். அப்போது என்னுடைய அப்பா மாதையன் பிரேதத்தின் மீது காவல் துறையினர் பிரேத விசாரணை செய்த போது நான் சாட்சியாக இருந்து கையெழுத்திட்டேன். இது சம்பந்தமாக காவல் துறையினர் என்னை விசாரித்தனர்.

## எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

எதிரி தரப்பில் வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

ஒப்பம்/–இரா.சுஷ்மிதா,
நீதித்துறை நடுவர் எண்.2
தருமபுரி.